1990 சனவரி 23]

சில 100 டன்கள்தான் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் கள்ளிகுளம், தர்மபுரி மாவட்டத்தில் சென்ட்ராயன் மலையின் கிழக்குச் சரிவிலும் குடமாண்டப்பட்டியிலும் இந்தப் பொருள் கிடைப்பதாக அறியப்படுகிறது. இதுவரையில் இந்தக் கனிமத்தைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் வெட்டி எடுத்து இருப்பதுபத்தேபத்து டன்கள்தான்.

எனவே, இவ்வளவு மிகக் குறைவாக இருக்கின்ற இந்தக் கனிமத்தை வைத்துக்கொண்டு பெரிய அளவில் தொழில்கள் ஏதும் தொடங்க நம்முடைய மாநிலத்தில் இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுழைவுத் தேர்வு முறை

*2617—திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு முறை இருப்பதனை மாற்றிட அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

நுழைவுத் தேர்வுமுறை 1984—85 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ளது. இம்முறைத் தேர்வுபற்றி இவ்வாண்டு பரிசீலித்ததில், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பொறியியற் கல்லூரிகளில் சேர்வதற்கான குறைந்தபட்ச விண்ணப்ப மதிப்பெண்கள் மட்டும் குறைக்கப்பட்டன. அடுத்துவரும் ஆண்டுகளில் தேவைப்பட்டால் மீண்டும் இத்தேர்வுமுறை பற்றி ஆய்வு செய்யப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புகுமுக வகுப்புத் தேர்வு நடைபெறுவதும், அந்தத் தேர்வுகளில் மதிப்பெண்கள் போடப்படுகிற முறையும் அது இந்த நுழைவுத் தேர்வை விடக் கடுமையாக இருப்பதும் எல்லோருக்கும் தெரியும். எனவே, இந்த நுழைவுத் தேர்வு என்பது ஒரு தடவை தேறிய மாணவர்களை மறுபடியும் தேர்விலே அமர வைத்து பரீட்சை எழுதச் சொல்லி அதுவும் அவசர, அவசரமாகத் திருத்தப்பட்டு அதிலே நாம் எதிர்பார்க்கிற உண்மையான மதிப்பெண் கொடுக்க முடியாது என்பது ஊர் அறிந்த உண்மை. இது ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்ட முறை, ஒரு குற்றத்திற்குஇரண்டு தடவை தண்டனை கொடுப்பதே சட்டப்படி

தவறு என்று சொல்வார்கள். அதுபோல் ஒரு தடவை தேறிய மாணவர்களைத் திரும்பவும் தேர்வில் அமர வைப்பது சட்டப்படி, நியாயப்படி முறையல்ல. அதை ரத்துசெய்வதற்கு அரசாங்கம்—இப்போது ஜூன் மாதம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, எனவே, இப்பொழுதே—முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஒரு காலத்தில் எப்போதோ ஏற்படுத்தப்பட்டது என்று ஏதோ ஒரு கருத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். இது ஏற்படுத்தப்பட்டது 1984–85ஆம் ஆண்டில். இந்தத் தேர்வு முறையிலே அதிகப்படியான குறைகள் இல்லை என்பது நிபுணர்களாக உள்ளவர்கள் ஆராய்ந்து தெரிவிக்கிற கருத்து. கேள்வித்தாள், விடை எழுதுகிற முறை இவைகளைப் பொறுத்தவரையில் சரியான பரிசீலனைக்குரியதான முறைதான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டதாக இதுவரையில் யாரும் தகுந்த ஆதாரத்தோடு எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. மேலும், பிளஸ் 2 தேர்வு பெற்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தேர்வு பெற்றவர்கள் என்ற அடிப்படையிலே இடம் தரவேண்டும் என்று சொன்னால் எந்தக் கல்லூரியிலும் இடம் தர முடியாது. எனவே, இடம் தருவதற்கு என்று சில முறைகள் வேண்டுமென்று சொன்னால் குறைந்த அளவுக்குத்தான் இடம் தரமுடியும் என்ற நிலையில், எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் ஒரு நியாயமான முறையில் வழங்கித் தீரவேண்டும். அப்படிப்பட்ட முறையாகத்தான் தகுந்த தேர்வுமுறையாகத்தான் இந்த தேர்வு முறை இருக்கிறது என்பது அந்தத் தேர்வு நடத்தக்கூடிய தகுதிமிக்க, பொறுப்புணர்ச்சியுள்ள நிபுணர்கள் பலரும் தெரிவிக்கின்ற கருத்தாகும்.

9-10 மணி

திரு. பா. அப்துல்சமத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நுழைவுத் தேர்வும் வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நேரத்தில் போராடி சிறைக்கும் சென்று இருக்கின்றார்கள். ஆனால், அதே நுழைவுத் தேர்வுகளை அமைத்து மீண்டும் ஆட்சி நடத்திக்கொண்டிருப்பதில் பல குறைபாடுகள் உள்ளதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரே ஒரு காரணம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி ஏதாவது இருக்கிறதா? சுட்டிக்காட்டுவது எல்லாம் வேண்டாம், கேள்வி இருக்கிறதா?

1990 சனவரி 23]

திரு. பா. அப்துல்சமத் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு வலிவூட்டுவதாக என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி இருந்தால் கேளுங்கள். வலிவு எல்லாம் வேண்டாம். அவர் நன்றாகவே இருக்கிறார். (சிரிப்பு).

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்விலே, நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய மாணவர்களோடு கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மாணவர்கள் போட்டி போட முடியவில்லை என்கின்ற நிலை இருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, கிராமப்புறங்களிலே இருந்து வரக் கூடிய மாணவர்களுக்கு ஏதாவது ஊக்க மதிப்பெண் தருகிற உத்தேசம் நம்முடைய அரசினுடைய செயற்குறிப்பிலே இருக்கிறதா ? அதாவது கிரேஸ் மார்க் தருகிற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வுகளை நடத்துகிற அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர், அவருடன் உள்ள அந்தக் குழுவினர் கிராமப்புறத்திலேயிருந்து வருகிற மாணவர்களுக்குக் கிடைக்கிற விகிதாச்சார எண்ணிக்கை குறைந்து விடுகிறதா என்பது பற்றி ஆராய்ந்து விவரம் தர வேண்டும் என்று அரசு சார்பிலே கேட்கப்பட்டபோது கிராமப்புறத்திலேயிருந்து கடந்த சில ஆண்டுகளாக அதிகத் தேர்ச்சியுள்ள மாணவர்கள் வருகிறார்கள். நகர்ப்புற மாணவர்களோடு போட்டியிடக்கூடிய அளவுக்கு உள்ளவர்களே வருகிறார்கள். எனவே, விகிதாச்சார அளவிலே பார்க்கிறபோது கிராமப்புற மாணவர்கள், பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் இன்னும் சொல்லப்போனால் விவசாயக் குடும்பத்துப் பிள்ளைகள், ஒரு தலைமுறை படித்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள் கூட குறிப்பிடத் தக்க அளவுக்கு விகிதாச்சார முறையில் தகுந்த அளவுக்கு இடம் பெறுகிறார்கள் என்ற உண்மையையும், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பொது இடங்களில் இடம் பெறக்கூடிய அளவுக்கு இன்றைக்கு வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது; ஏனென்றால் போட்டி அதிகமாகின்றபோது தகுதி உள்ளவர்கள் தேவையான அளவுக்கு அனைத்து நிலையிலே இருந்தும் இடம் பெறுகிறார்கள் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், இது வளரும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களிலே இருந்து வருகின்ற மாணவர்களுக்கு சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதுவதற்காகத் தனியாகப்

பயிற்சி அளிக்கப்படுவதுபோல, இந்த நுழைவுத் தேர்வு எழுது வதற்கும் தனியாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடை, எத்தனை இலட்சம் பேர்களுக்கு, எந்த முறையிலே அளிப்பது என்பது.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வு என்பது 2 ஆண்டுகள் பிளஸ் 2 படித்திருக்கின்ற மாணவர்கள் நுழைவுத் தேர்வின்போது ஒரு ''One Word Answer'' போல சுருக்கமாக பதில் அளிக்கக் கூடிய சில கருத்துக்கள் அதில் கேட்கப்படுவதால் அவர்களுடைய முழுத் திறமை, அறிவுத் திறமை வெளிப்படுத்துவதாக அது அமையாது. ஆகவே, இந்தக் கேள்விமுறையை மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு முறை பற்றிப் பல்வேறு விதமான நிபுணர்கள் கருத்துக்கள் தொடர்ந்து வழங்கப்பட்ட முறையில் மாணவர்கள் விடை எழுதுவதற்கு, தங்களுடைய திறமையைப் பயன்படுத்தி எழுத வேண்டும் என்பதை விடத் தங்களுக்குத் தெரிந்த உண்மைகளை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். அதுதான் அவர்களுடைய அறிவாற்றலுக்குத் தக்க சான்று என்ற முறை அண்மைக்காலத்திலே எல்லா பல்கலைக் கழகங்களிலும், உலகம் முழுவதிலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வினாடி வினா என்று தொலைக் காட்சியிலே வருவதைப் போல், அவர்கள் ஒரு கேள்வியை எண்ணியவுடன் தங்களுடைய விடை மனதிலே தோன்றுகின்ற ஒரு தகுதியை அதிகச் சிரமம் இல்லாமல் வெளிப்படுத்துவதன் மூலமாக அந்த மாணவருடைய இயற்கை அறிவாற்றலைப் புலப்படுத்துகிற ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இது எந்த வகையிலும் தவறல்ல என்றுதான் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

திருநெல்வேலியில் பல்கலைக் கழகம்.

*5503—திரு. அ. லெ. சுப்பிரமணியன், திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி, திருநெல்வேலியில் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?